[2010 ஏப்ரல் 20

எனவே, இதுபோன்ற காலக்கட்டங்களில், மீன்பிடிக்கத் தடை விதித்த காலங்களில் ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் மாதம் 3,000 ரூபாய் வழங்க அரசு முன்வருமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அன்றாடம் 1 டன், 2 டன் என்று மீன் கிடைப்பதில்லை. ஏதோ மாதத்தில் ஒரு நாளோ அல்லது வருடத்திலே தொடர்ந்து 4 நாட்களோ, 5 நாட்களோ இதுபோன்று ஒரு டன், 2 டன் மீன்கள் கிடைப்பது வழக்கம். தொடர்ந்து இது போன்று அதிகமான மீன்கள் அந்தப் பகுதியிலே கிடைப்பதில்லை. அதிகமான மீன்கள் வரத்து இருந்தால்தான் அது போல ஒரு குளிர்பதன அறை அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, மீன்பிடித் தடை செய்யப்பட்ட காலமாக இருக்கக்கூடிய அந்த 45 நாட்களுக்கு தமிழக வரலாற்றில் முதன்முதலாக நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள்தான் கடற்கரையிலே இருக்கக்கூடிய 2 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 500 ரூபாய் வீதம், 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாக வேண்டுமென்று கேட்கின்றார்கள். அதற்கு என்னுடைய மானியக் கோரிக்கையிலே பதில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

70—

பால் குளிரூட்டும் நிலையம்

***106316—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 20]

சூலூர், சோமனூர், பல்லடம் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் அடங்கிய பல்லடம் பகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டையில் 50,000 லிட்டர் பால் கொள்ளளவுள்ள பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருவதாலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கொள்ளளவுள்ள பிரதான பால்பண்ணை செயல்பட்டு வருவதாலும், சூலூர், சோமனூர் மற்றும் பல்லடத்தில் புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்குத் தற்போது சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி செய்வது விவசாயி, விவசாயக் கூலிகளுக்கு ஜீவாதாரமாக இருப்பது. இன்றையதினம் 3 மணி நேரம், 4 மணி நேரம் அந்தப் பாலைக் கொண்டு செல்லும்போது, கெட்டுவிடுவதால், அங்கு இருக்கின்ற கூட்டுறவுச் சங்கத்திற்கும், விவசாயிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, மீண்டும் அங்கு குளிர்பதனக் கூடம் அமைக்கவேண்டும். இல்லையென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 17 பால் தொகுப்பு குளிரூட்டும் பி.எம்.சி. இயந்திரம் அமைக்கும் திட்டம் இருந்தது. அதில் 3 மட்டும், இந்த 4 ஆண்டுக்காலமாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த செங்கத்துறை, செம்மிபாளையம், கே. ஐயம்பாளையம் போன்ற பகுதிகளில் இன்னும் செயல்படுத்தாமல் மாற்றான்தாய் போக்கோடு இருப்பதை மாற்றி அரசு செய்யுமா என்பதை இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க

வேண்டுமென்று சொன்னால் அந்தப் பகுதியிலே 50,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படவேண்டும். அதோடு அதற்கு 4 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது, 5 கோடி ரூபாய் செலவாகிறது என்ற காரணத்தால்தான், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மொத்த பால் குளிர்விப்பான்கள் 2,000 லிட்டர், 3,000 லிட்டர், 5,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறபோது அந்தப் பகுதியிலே மொத்தக் குளிர்விப்பான்கள் அமைப்பதற்காக தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மட்டும் 166 பால் குளிர்விப்பான்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றியவாரியாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 17 ஒன்றியங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோவை ஒன்றியத்திலே 4, தருமபுரி ஒன்றியத்திலே 15, ஈரோடு ஒன்றியத்திலே 12, காஞ்சிபுரம் ஒன்றியத்திலே 10, மதுரை ஒன்றியத்திலே 16 நீலகிரி ஒன்றியத்திலே 9, புதுக்கோட்டை ஒன்றியத்தில் 1, சேலம் ஒன்றியத்தில் அதிகபட்சமாக 26, சிவகங்கை ஒன்றியத்திலே 5, தஞ்சாவூர் ஒன்றியத்தில் 7, திருச்சி ஒன்றியத்தில் 17, திருநெல்வேலி ஒன்றியத்தில் 2, வேலூர் ஒன்றியத்தில் 20, விழுப்புரம் ஒன்றியத்திலே 19, திண்டுக்கல் ஒன்றியத்திலே 3, ஆக மொத்தம் 166 பால் குளிர்விப்பான்களை நாங்கள் அமைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப்போல இது இயக்கம் பார்ப்பதோ, சட்டமன்ற உறுப்பினர் யார் என்று பார்ப்பதோ அல்ல. பால் உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில், பால் கறந்த நிலையிலே, அரை மணி நேரம், ஒரு மணி நேரத்தில், அதில் பாக்டீரியாக்கள் அதிகம் வராத அளவிற்குப் பாதுகாக்க வேண்டுமென்ற பொது நோக்கத்தோடுதான் நாங்கள் செயல்படுகிறோமே தவிர, இயக்க வேறுபாடுகளோ, சட்டமன்ற உறுப்பினர்களோ, மாற்றான்தாய் மனப்பான்மையோ இந்த அரசுக்கு என்றைக்கும் இருந்ததில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடத்தில், தற்போதைக்கு மொத்தக் குளிர்விப்பான்கள் அமைப்பது தேவை இல்லாமல் இருக்கிறது. அதை அதிகாரிகளைக்கொண்டு ஆய்வு செய்து, பால் உற்பத்தி அதிகமாக வருமேயானால், நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளை இந்த அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வெலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது பால் தொகுப்புக் குளிரூட்டு இயந்திரம் என்பது 2,000 லிட்டர், 5,000 லிட்டர் கொண்டது. கோவை மாவட்ட பால் ஒன்றியத்திற்கு 17 குளிரூட்டு இயந்திரங்கள் அறிவிக்கப்பட்டு நான்கு ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. அவற்றில், மூன்று மட்டும் தொடங்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த செங்கத்துறை, செல்விபாளையம், கே.ஐயம்பாளையம் போன்ற பகுதிகளில் இன்னும் தொடங்கப்படவில்லை என்பதைத்தான் சுட்டிக்காட்டினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விரைவில் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். சுற்றிலும் இருக்கக்கூடிய சுல்தான்பேட்டை, திருப்பூர், அன்னூர் போன்ற பகுதிகளுடைய மையப் பகுதியாக இருக்கின்ற பல்லடம், சூலூர், சோமூர் பகுதிகளிலிருந்து கேரள மாநிலத்திற்கு அதிகமாக பால் சென்று கொண்டிருக்கிற நிலையில், இங்கே உற்பத்தியும் அதிகரித்து இருக்கின்ற நேரத்தில், பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து இரண்டரை இலட்சம் லிட்டர் பால்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. உள்ளூர் தேவைகளுக்குப் போக மீதமுள்ள பால் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தற்பொழுது கொள்முதல் ஆகக்கூடிய பாலை வைத்துக்கொண்டு பால் பவுடர் உற்பத்தி செய்யக்கூடிய நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறு ஏதும் இல்லை. பால் உற்பத்தி அதிகமாக இருக்கிறபோது, சென்னையின் தேவைகளைப் பூர்த்தி செய்தது போக, அதிகம் மிச்சம் இருக்குமேயானால், பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கலாம்.

இன்றைக்கு, திருவண்ணாமலையிலேகூட 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பால் பவுடர் நிலையம் அமைப்பதற்காக பல்வேறு பணிகள் முடிவுற்று, டெண்டர் விடப்பட்டு, அந்தத் தொழிற்சாலையும் தொடங்கக்கூடிய நிலையிலே இருக்கிறது. ஆக,

[2010 ஏப்ரல் 20

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. வேலுசாமி அவர்கள் குறிப்பிடுவதைப்போல அதிகமான பால்வருமேயானால் அதுபோன்ற தொழிற்சாலை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 219-வது விதியின்கீழ், அவை உரிமையை மீறும் செயல் என்ற முறையில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தது கரும்புக்கு 1014 ரூபாய். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். இரண்டாவது முறை திரும்பவும் அதைப் பதிய வேண்டுமா? வேண்டுமானால், இது குறித்து என்னுடைய தீர்ப்பைச் சொன்னதற்குப் பிறகு, நீங்கள் முடிவெடுக்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மிக முக்கியப் பத்திரிகையில் பணிபுரியும் சக பெண் பத்திரிகை ஆசிரியரை, அதே பத்திரிகையில் பணிபுரிகின்ற*